**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,**

**TENKASI.**

**Date : 28.01.2026**

**MCOP No. : 178/2021**

**Rw : 2**

**Name : திரு.ராஜேஷ்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக அனுமதிக்கப்படுகின்றார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கெனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். இன்று எனது தரப்பில் 7 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) காப்பீட்டு எண். 23201009722915000 அதன் காப்பீட்டு தேதி 22.01.2021 முதல் 21.01.2022 வரைக்கான இருசக்கர வாகனத்திற்கான உண்மை காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ.3 ஆகும். 2) மேற்படி காப்பீடு செலுத்தப்பட்டதற்கான பிரீமியம் பதிவு புத்தகத்தின் நகல் 20.01.2021 முதல் 22.01.2021 வரைக்கானது மற்றும் சாட்சிய சட்டம் 65 பி படியான சான்று எ.ம.சா.ஆ.4 ஆகும். 3) 2 வது எதிர்மனுதாரரால் உருவாக்கப்பட்ட போலி காப்பீட்டு நகல் எ.ம.சா.ஆ. 5 ஆகும். 4) மேற்படி மகேந்திரா Maxi Cab வாகனத்திற்கன பதிவு சான்றின் விவரப்பட்டியல் எ.ம.சா.ஆ.6 ஆகும். 5) 2 வது எதிர்மனுதாரர் மீது சேர்ந்தமரம் காவல் நியைத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனுவின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது எ.ம.சா.ஆ. 7 ஆகும். 6) மேற்படி காப்பீட்டு எண். 23201009722915000 அதன் காப்பீட்டு தேதி 22.01.2021 முதல் 21.01.2022 வரைக்கான இருசக்கர வாகனத்திற்கான காப்பீடு ரத்து செய்ததற்கான அலுவலக கடிதம் எ.ம.சா.ஆ. 8 ஆகும். 7) 2 வது எதிர்மனுதாரர் மீது பதிவுசெய்யப்பட்ட FIR எ.ம.சா.ஆ. 9 ஆகும்.

3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். ( மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi